International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

ஔவையார் நோக்கில் பிரிவாற்றமை (குறுந்தொகை - முன்வைத்து)

த. சுகன்யா
முனைவர்பட்ட ஆய்வாளர் - தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

முன்னுரை

குறுந்தொகைப் பாடல்களில் ஔவையாரின் பாடல்கள் மட்டும் பதினைந்து பெற்றுள்ளன. அவை முறையே இரவுக்குறி, அறத்தொடு நிற்றல், பிரிவாற்றாமை, நெஞ்சொடு கிளத்தல், செலவு உடம்படச் செய்தல், தலைவன் கூற்று மற்றும் பரத்தையரின் மனநிலை ஆகிய பலவித(பாடுபொருள்) அகவுணர்வுகளைத் தாங்கிய வண்ணம் உள்ளது. இப்பாடு பொருட்களில் பெண்களுக்கே உரித்தான பிரிவாற்றாமை எனும் பாடுபொருளினையே இக்கட்டுரை முன்வைக்க விழைகிறது.

குறுந்தொகைப் பாடல்களில் காமம் சேர்குளத்தார், வெள்ளி வீதியார், கபிலர் மற்றும் கழார்க்கீரன் எயிற்றியார் போன்ற பலப் பல புலவர்கள் பிரிவாற்றாமையின் நிலையினை திறம்பட எடுத்தியம்பியுள்ளனர்.

"நோம் என் நெஞ்சே, நோம் என் நெஞ்சே
இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி,
அமைதற்கு, அமைந்த நம்காதல்
அமைவுஇலர் ஆகுதல் நோய் என் நெஞ்சே"[1]

களவொழுக்கத்தில் ஈடுபட்டது யாருக்கும் தெரியாது. அங்கிருந்தது நாரை ஒன்றே, அதுவும் ஓடுகின்ற ஆற்றில் ஆரல்மீன் வருகையைப் பார்த்திருந்தது என்று தலைவியானவள் தலைவனைப் பிரிந்து வாடும் துயரினை வெளிப்படுத்தவதாக அமைந்துள்ளது.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்கள் மனிதர்களின் அகவுணர்வுகளையும் வாழ்வியல் நிலைகளையும் நுட்பமாகப் பதிவு செய்கின்றன. அவ்வகையில் குறுந்தொகையில் இடம்பெறும் ஔவையாரின் பாடல்கள் காதல், பிரிவு, ஏக்கம், காத்திருப்பு, நம்பிக்கை போன்ற பல்வேறு உணர்வுநிலைகளை வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் பிரிவாற்றாமை தலைவியின் அகவுலகை வெளிப்படுத்தும் முக்கியமான பாடுபொருளாக அமைகிறது. இவ்வாய்வு குறுந்தொகையில் ஔவையாருக்குரிய பாடல்களில் வெளிப்படும் பிரிவாற்றாமையை மையப்படுத்தி அமைகிறது. குறிப்பாக நெய்தல், பாலை, முல்லை ஆகிய திணைகளில் இடம்பெறும் பாடல்களின் வழியாக தலைவியின் மனநிலை, பிரிவுத் துயரம், காத்திருப்பு, தலைவன் மீதான நம்பிக்கை, காலநிலை மற்றும் இயற்கைக் கூறுகளுடன் இணைந்த அகவுணர்வு ஆகியவை ஆராயப்படுகின்றன. மேலும், தோழி - தலைவி உரையாடலின் வழியாக வெளிப்படும் பெண்ணின் தனித்துவமான குரலும் உணர் வியல் வெளிப்பாடும் கவனத்தில் கொள்ளப் படுகின்றன. விளக்கவியல் மற்றும் பகுப் பாய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வு, ஔவையாரின்

பாடல்களில் பிரிவாற்றாமை வெறுமனே காதல் துயரமாக மட்டுமன்றி, பெண்ணின் நுட்பமான அகவுலகை வெளிப் படுத்தும் இலக்கிய வெளிப்பாடாக அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

முதன்மைச் சொற்கள்: ஔவையார், குறுந்தொகை, பிரிவாற்றாமை, தலைவி, அகவுணர்வு, பெண்ணியப் பார்வை, சங்க இலக்கியம்.

ஔவையாரின் பிரிவாற்றாமை

குறுந்தொகையில் சங்க காலப் புலவர்கள் பலரும் பிரிவாற்றாமையின் துன்பத்தினை பலவாறு எடுத்துக் கூறியிருப்பினும், சங்க இலக்கியப் பாடல்களில் புகழ்பெற்ற பெரும்பான்மையாக இன்றளவும் சான்றோர் பெருமக்களால் போற்றப்படும் ஔவையார் பாடல்களின் தனித்தன்மையினை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாக விளங்குகிறது.

அவ்வகையில் குறுந்தொகை பாடல் எண்ணிக்கை நெய்தல் திணை-102, பாலைத்திணை-28,43,39, முல்லைத்திணை-183,200 ஆகிய பாடல்களில் (ஔவையார் பெண்ணியப்பார்வையில்) பிரிவாற்றாமையின் துயரினை அடைய நேரிடும் பொழுது, தலைவியானவள் தன் இயல்பிற்கு மாறானவளாய் சிந்திக்க கூடியவளாக காணப் படுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

பிரிவாற்றாமை

தலைவன் தான் வருவதாகக் கூறிச் சென்ற சொல் தவறி மேலும் காலம் நீட்டித்ததால் தலைவி தோழியிடம் தலைவனின் சொல் தவறியதை கூறுவதாக அமையும் பாடல் பின்வருமாறு.

“உள்ளின் உள்ளம் வேமே, உள்ளாது
இருப்பின் எம்அளவைத்து அன்றே வருத்தி
வான் தோய்வற்றே காமம்,
சான்றோர் அல்லர் யாம் மரீஇயோரே”[2]

இப்பாடலின் பொருளானது - தோழி! தலைவனை நினையுங்கால் என் மனம் வேகின்றது. அவனை நினையாமல் இருப்பது என் இயல்பிற்கு மாறானது. ஆனால் அவனால் ஏற்பட்ட காமநோய் வானத்தை உரசுமளவிற்கு உயருகின்றது. இத்தகு காதல் நோயில் என்னை அகப்படச் செய்து பிரிந்து சென்ற நம் அன்பிற்குரியவர் நற்குணம் உடையவரல்லர் என்று தலைவி தலைவனை இகழ்ந்துரைக்கிறாள்.

பாலைத்திணையில் வரைவிடை வைத்துப் பிரிந்து சென்ற தலைவனை நினைத்து தோழியிடம் தலைவியானவள் உரைப்பதாக அமையும் பாடல்களும் உள்ளன.

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஆ அ ஒல்லெனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே?”[3]

இப்பாடலின் பொருளானது தோழி! என்னுடைய (துன்பம்) கவலை அறியாமல் காற்றானது வீசுகின்றது. அக்காற்றானது ஊரில் உள்ள அனைவருக்கும் இன்பம் பயப்பதாக அமைகிறது. அதன் பொருட்டு ஊரில் உள்ள அனைவரும் ஆழ்ந்து உறங்குகின்றனர். இதனைக் கண்டு கொள்ள மனமில்லாத நான் இவ்வூரில் உள்ளோரை முட்டுவேனா? தாக்குவேனா? இல்லை ஆஅல் என அதிர்ச்சிக்குள்ளான ஒலியெழுப்பி கூவுவேனா? எதைச் செய்வது யான் அறியேன்!

பிரிவாற்றாமை பாலைத்திணையில் பாடல் எண் 39இல் பிரிவிடை ஆற்றல் வேண்டும் எனக் கூறிய தோழியிடம் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் என மிகுதிபடத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

“**வெந்திறல் கடுவளி பொங்கர்ப் பொந்தென**
நெற்று விளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலையுடை அருஞ்சுரம் என்ப, நம்
முலை இடை முனிநர் சென்ற ஆறே”[4]

தோழி! நம் மார்பொடு பொருந்தி துயிலும் தூக்கத்தை வெறுத்த நம் தலைவன் சென்ற பாலைநில வழியானது வெப்ப மிகுதியால் வீசும் காற்றில் வாகை மர வற்றல் ஒலிக்கும் மலையையுடையதாகும்.

இங்கு தலைவியானவள், தலைவன் தன்னை மணந்து கொள்ளுதன் பொருட்டு கடத்தற் கரிய பாலை நிலத்தினை கடக்கத் துணிந்து சென்றதனை எண்ணி தன் நெஞ்சி ஆற்றாளாய்த் தோழியிடம் கூறுவதாக பொருள் கொள்ளவும் இடம் தருகின்றது.

குறுந்தொகை பா.183 200 முல்லைத் திணையில் பொருள்வயின் பிரிந்து சென்ற தலைவன் கார்காலம் வரவதற்க முன் வருவதாகக் கூறிய நல்மொழி, காலம் கடந்ததால் ஆற்றியிருப்பவளாய் அல்லாமல் இருந்த தலைவியைக் கண்டு கவலையுற்ற தோழிக்குத் தலைவி கூறுவதாக அமையும் பாடல்கள் பின்வருமாறு,

“சென்ற நாட்ட கொன்றையும் பசு வீ
நம்போல் பசக்குங்காலைத் தம் போல்
சிறுதலைப் பிணையின் தீர்த்த நெறி கோட்டு
இரலை மானையும் காண்பர் கொல், நமரே
புல்லென காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்,
கான வைப்பின் புன்புலத்தானே?”[5]

இப்பாடல் பொருளாவது, தோழி! காயா

மலர்கள் மழைக்கு முன் பொலிவிழந்து காணப்படும். மழைப் பொழிவிற்குப் பின் மயிலின் கழுத்து போன்ற மென்மையாகக் காணப்படும். தற்பொழுது பொலிவு இழந்த நிலத்திற்கு என்னை விட்டு பிரிந்து சென்ற நாட்டின் கொன்றை மலர்கள் நம்மைப் போல் பசலை நோய்க்கு ஆட்பட்டிருப்பதை யும், பெண்மானிடமிருந்து நீங்கிய பெரிய கொம்புகளையுடைய ஆண்மானினையும் நம் தலைவர் காண்பாராயின் நிச்சயம் நம்மொடு விரைந்து வந்து சேரவார் எனத் தோழியிடம் தலைவியானவள் கூறுகிறாள்.

இப்பாடலில் தலைவியானவள் தலைவன் மீது அளவு கடந்த நம்பிக்கை உடையவளாய் காணப்படுகிறாள். மேற்கூறிய நிமித்தங்களை யெல்லாம் தலைவர் காணின் நிச்சயம் வருவார். ஆதலால் தலைவன் இதுவரை எந்த நிமித்தங்களையும் காணவில்லை. அதுவே, காலம் தாழ்த்தக் காரணமாகும் என்று உறுதியாகக் கூறுவாளாய் தலைவி காணப்படுகிறாள்.

பாடல் எண். 200 முல்லைத்திணையின் பாடலும் பொருளும் பின்வருமாறு,

"பெய்த குன்றத்துப் பூநாறு தண் கலுழ்
மீமிசைச் தாஅய வீஇ சுமந்து வந்து
இழிதரும் புலும் வாரார் தோழி, மறந்தோர்
மன்ற, மறவா நாமே
இன்னிசை உருமின் முரலும்
முன்வரல், ஏமம் செய்து அகன்றோரே"[6]

கார்காலம் தவறினும் தலைவன் வராமையால் துயருற்ற தலைவியின் நிலையினைக் கூறும் பாடல் இது.

தலைவியின் பிரிவாற்றாமையைக் கண்டு கவலையுற்று இது கார்காலமன்று 'வம்பு' எனக் கூறியத் தோழியிடம் தலைவி கூறுவதாக அமைந்த பாடலாக அமைகிறது.

தோழி கார்பருவத்தின் மாலைக்காலத்தில் மலைப்பகுதியில் இனிய இடி ஓசையுடன் மேகங்கள் முழங்கும். முன்னம் பெய்த மழையினிடத்து மலர்கள் குவிந்து, பின் அருவியில் வீழ்ந்து, மணம் வீசுகின்ற அருவிப் புனலாகின்றது. நீர் கூறிய படி 'வம்பு' அன்று. கார்காலம் வந்தபின்னும் தலைவன் வாராலாயினார். ஆகையின் உறுதியாக நம்மை மறந்தவராயினார். ஆனால் நாம் அவரை மறத்தல் செய்யாது காத்திருப்போம் எனக் கூறுவதாக அமைகிறது.

முடிவுரை

குறுந்தொகையில் இடம்பெறும் ஔவையாரின் பாடல்கள் காதல் வாழ்வின் பல்வேறு அகவுணர்வுகளை நுட்பமான கவிதை மொழியில் பதிவு செய்கின்றன. அவற்றுள் பிரிவாற்றாமை குறிப்பிடத்தக்க பாடு பொருளாக அமைகிறது. நெய்தல், பாலை, முல்லை ஆகிய திணைகளில் இடம்பெறும் பாடல்களின் வழியாகத் தலைவியின் பிரிவுத் துயரம், ஏக்கம், அச்சம், காத்திருப்பு, நம்பிக்கை, கோபம் ஆகிய பல்வேறு உணர்வு நிலைகள் வெளிப்படுகின்றன.

இப்பாடல்களில்தலைவி செயலற்ற நிலையில் காணப்படுவதில்லை. தன் உணர்வுகளைத் தோழியிடம் வெளிப்படுத்துதல், தலைவனின் காலதாமதத்தைச் சுட்டிக்காட்டுதல், அவன் மீது நம்பிக்கை கொள்ளுதல், அவன் வருகைக்கான அறிகுறிகளை இயற்கையில் தேடுதல் போன்ற செயல்பாடுகளின் வழியாகத் தன் அகவுலகைத் தன்னிச்சையாக வெளிப்படுத்துகிறாள்.

மேலும், இயற்கைக் கூறுகள் தலைவியின் மனநிலையை வெளிப்படுத்தும் குறியீடு களாகச் செயல்படுகின்றன. பாலைநிலத்தின் வெப்பமும் அருஞ்சுரமும் தலைவியின் அச்சத்தையும் துயரத்தையும் பிரதிபலிக் கின்றன. முல்லைநிலத்தின் மழை, மலர், மான் போன்ற கூறுகள் தலைவியின் காத்திருப்பையும் நம்பிக்கையையும் வெளிப் படுத்துகின்றன.

இதனால் ஔவையாரின் குறுந்தொகைப் பாடல்களில் பிரிவாற்றாமை என்பது காதல் பிரிவின் துயரத்தை மட்டும் பதிவு செய்வதாக இல்லாமல், பெண்ணின் நுட்பமான அகவுலகம், உணர்வுச் சுதந்திரம், எதிர் பார்ப்பு, காத்திருப்பு மற்றும் சுய வெளிப் பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் இலக்கியப் பதிவாக அமைந்துள்ளது. சங்க காலப் பெண்ணின் அகவுணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கு ஔவையாரின் பாடல்கள் முக்கியமான தரவுகளாக அமைகின்றன.

சான்றெண் விளக்கம்

1. குறுந்தொகை, பா. 4 .
2. மேலது., பா. 102, ப.248, நெய்தல் திணை.
3. மேலது., பா. 28, ப. 115, பாலைத்திணை.
4. மேலது., பா. 39. பாலைத்திணை.
5. மேலது., பா. 183 200.
6. மேலது., பா. 200 முல்லைத்திணையின்.

துணைநின்ற நூல்கள்

1. முனைவர் வி. நாகராசன், குறுந்தொகை (மூலமும் உரையும்).
2. கவிஞர் கருமலைத் தமிழாழன், புதிற குறுந்தொகை.
3. பரிமேலழகர் (உரை.), திருக்குறள்.